# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

## 2016 / 2017 (யூன் - 2019)

**HYS: 4133 Nationalism & Ethnicity**

**HYS: 4133 இனத்துவமும் தேசியவாதமும்**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும், இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

---

### பகுதி - I

1. "20 ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் வலுப்பெற்ற அந்நியருக்கெதிரான தேசியவாத உணர்வே தென்னாசிய நாடுகளின் விடுதலைக்கு காரணமாக அமைந்திருந்தது." இக்கருத்தினை மையப்படுத்தி மேல்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.
   அ) இந்திய தேசிய போராட்டம் (10 புள்ளிகள்)
   ஆ) இலங்கைத் தேசிய போராட்டம் (10 புள்ளிகள்)

2. அ) "இனத்துவம்" என்பதை வரையறை செய்க. (10 புள்ளிகள்)
   ஆ) தென்னாபிரிக்க கறுப்பின மக்களது விடுதலையில் நெல்சன் மண்டேலாவின் பங்களிப்பு பற்றி சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

3. மத அடிப்படைவாதச் சிந்தனைகளின் வெளிப்பாட்டினை மேல்வரும் நாடுகளின் நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.
   அ) இந்தியா (10 புள்ளிகள்)
   ஆ) அரபு நாடுகள் (10 புள்ளிகள்)

### பகுதி - II

4. தேசியவாதம் எனும் எண்ணக்கருவினை வரையறை செய்து 20ஆம் நூற்றாண்டு உலக வரலாற்றில் சர்வாதிகார அரசுகளின் உருவாக்கத்தில் அக்கருத்தியல் ஏற்படுத்திய செல்வாக்கினை பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

5. தற்கால உலக ஒழுங்கில் 'தேசியவாதம்' ஜனநாயக கொள்கைகளுக்கு சவாலாக அமையும் விதம் குறித்து கட்டுரை எழுதுக. (20 புள்ளிகள்)

6. "யூதர்களின் தேசியவாதமே இஸ்ரேல் எனும் தனி நாட்டின் உருவாக்கத்திற்கு காரணமாக அமைந்தது." இக்கூற்றினை ஆராய்க. (20 புள்ளிகள்)

7. "தமிழ்த் தேசியவாதத்தின் வெளிப்பாடே இலங்கைத் தமிழரின் சுயநிர்ணய உரிமைப் போராட்டமாகும்" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை விமர்சிக்குக. (20 புள்ளிகள்)